**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 84/2025**

Deposition of Witness : LW2 /PW2

| Name | காளியம்மாள் | Taluk | |
|---|---|---|---|
| Husband Name | முனியன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17.04.2026.** | | | |

**எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் கல்லுமடை அம்மன் நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சாலினி எனது மகள் ஆவார். எனது மகளுக்கும் மருமகனுக்கும் கலப்பு திருமணம் நடந்து கருத்து வேறுபாடுகள் காரணமாக என் மகள் என்னுடன் தான் இருந்து வந்தார். கடந்த 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் நானும், எனது மகளும் எனது வீட்டில் இருந்தபோது, யாரோ ஒரு நபர் அங்கு வந்து என்னையும், எனது மகளையும் அடித்து கொலைமிரட்டல் விடுத்தார்கள். இரவு நேரமாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் எனது மகளுக்கும், எதிரியான ரவிக்குமார் என்பவருக்கும் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டு காதலித்து கலப்பு

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்

திருமணம் செய்து கொண்டதாகவும், பின்னிட்டு எதிரி ரவிக்குமார் மது அருந்திவிட்டும், கஞ்சா போட்விட்டு வந்து தனது மகளை துன்புறுத்தியதாகவும், கடந்த 01.06.2022 ம் தேதி இரவு 07.00 மணியளவில் எனது மகள் எனது வீட்டில் இருந்தபோது, எதிரி அங்கு வந்ததாகவும், அவரது கையால் எனது மகளின் கை மற்றும் வலது முழங்கையில் அடித்ததாகவும், என்னையும் அடித்தார் என்றும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், இது சம்பந்தமாக எனது மகள் கரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலிசார் விசாரித்தபோது நடந்த சம்பவத்தை சொல்லிவிட்டு, தற்போது எதிரியுடன் சமதானம் ஆகிவிட்டதால், எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.